அச்சிட்டோர் : அரசு மைய அச்சகம், சென்னை—600 001.



# உள், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை

## நீதி நிருவாகம்

மானியக் கோரிக்கை எண். 3

## சிறைகள் மற்றும் சீர்திருத்தப் பணிகள்

மானியக் கோரிக்கை எண். 24

## சட்டத் துறை

மானியக் கோரிக்கை எண். 33

அறிவிப்புகள்

2023 - 2024

# உள், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை

## நீதி நிருவாகம்
மானியக் கோரிக்கை எண். 3

## சிறைகள் மற்றும் சீர்திருத்தப் பணிகள்
மானியக் கோரிக்கை எண். 24

## சட்டத் துறை
மானியக் கோரிக்கை எண். 33

அறிவிப்புகள்

2023-2024

**எஸ். ரகுபதி**

சட்டத்துறை அமைச்சர்

# நீதி நிருவாகம்

1. திருநெல்வேலி மாவட்டம் திருநெல்வேலியில் குழந்தைகளை பாலியல் குற்றங்களிலிருந்து பாதுகாக்கும் சட்டம், 2012-ன் கீழ் பதிவு செய்யப்படும் வழக்குகளை விசாரிப்பதற்காக கூடுதலாக ஒரு சிறப்பு நீதிமன்றம் அமைத்தல்.

Constitution of one more Special Court in the cadre of District Judge at Tirunelveli in Tiruneveli District for trial of cases under the Protection of Children from Sexual Offences (POCSO) Act, 2012.

திருநெல்வேலி மாவட்டம் திருநெல்வேலியில் பாலியல் குற்றங்களிலிருந்து குழந்தைகளை பாதுகாக்கும் சட்டம், 2012-ன் கீழ் பதிவு செய்யப்படும் வழக்குகளை விசாரிப்பதற்காக கூடுதலாக மாவட்ட நீதிபதி பதவி நிலையில் ஒரு சிறப்பு நீதிமன்றம் அனைத்து உட்கட்டமைப்பு வசதிகளுடன் அமைக்கப்படும்.

## 2. திருவண்ணாமலை மாவட்டம் செய்யாறில் ஒரு கூடுதல் சார்பு நீதிமன்றம் அமைத்தல்.

**Constitution of an Additional Subordinate Judge's Court at Cheyyar in Tiruvannamalai District.**

திருவண்ணாமலை மாவட்டம் செய்யாறில் 12 புதிய பணியிடங்கள் மற்றும் அனைத்து உட்கட்டமைப்பு வசதிகளுடன் கூடிய, ஒரு கூடுதல் சார்பு நீதிமன்றம் அமைக்கப்படும்.



## 3. விழுப்புரம் மாவட்டம் வானூரில் தற்போது இயங்கிவரும் மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றத்தை பிரித்து தனியாக ஒரு மாவட்ட உரிமையியல் நீதிமன்றமும், ஒரு குற்றவியல் நடுவர் நீதிமன்றமும் அமைக்கப்படும்.

**Constitution of separate District Munsif Court and separate Judicial Magistrate Court at Vanur in Villupuram District, by bifurcating the existing District Munsif-cum-Judicial Magistrate Court with creation of various posts and other infrastructure facilities.**

விழுப்புரம் மாவட்டம் வானூரில் தற்போது இயங்கிவரும் மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றத்தை பிரித்து தனியாக ஒரு மாவட்ட உரிமையியல் நீதிமன்றமும், ஒரு குற்றவியல் நடுவர் நீதிமன்றமும், தேவையான பணியிடங்கள் மற்றும் அனைத்து உட்கட்டமைப்பு வசதிகளுடன் அமைக்கப்படும்.

## 4. வேலூர் மாவட்டம் அரக்கோணத்தில் ஒரு குற்றவியல் நடுவர் நீதிமன்றம் அமைத்தல்.

## Constitution of a Judicial Magistrate Court at Arakkonam in Vellore District.

வேலூர் மாவட்டம் அரக்கோணத்தில் அனைத்து உட்கட்டமைப்பு வசதிகளுடன் கூடிய ஒரு குற்றவியல் நீதிமன்றம் அமைக்கப்படும்.



## 5. காஞ்சிபுரம் மாவட்டம் செங்கல்பட்டு ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகத்தில் உள்ள மாவட்ட சட்டப் பணிகள் ஆணைக்குழு கட்டடத்தின் முதல் தளத்தை புதுப்பித்து, வணிக நீதிமன்றங்கள் செயல்பட இடமளித்தல்.

## Provision of accommodation for the Commercial Courts in the Combined Court Building Campus at Chengalpattu by renovating the first floor of the District Legal Services Authority Building in the campus at a cost of Rs.1,45,00,000/-

காஞ்சிபுரம் மாவட்டம் செங்கல்பட்டு ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகத்தில் உள்ள மாவட்ட சட்டப் பணிகள் ஆணைக்குழு கட்டடத்தின் முதல் தளத்தை ரூ.1,45,00,000/- செலவினத்தில் புதுப்பித்து, வணிக நீதிமன்றங்கள் செயல்பட இடமளிக்கப்படும்.

6. சேலம் மாவட்டம் மேட்டூர், நாமக்கல் மாவட்டம் ராசிபுரம் மற்றும் திருச்செங்கோடு, தஞ்சாவூர் மாவட்டம் பட்டுக்கோட்டை மற்றும் திருவையாறு ஆகிய இடங்களிலுள்ள ஒருங்கிணைந்த நீதிமன்ற கட்டடங்களில் மின்தூக்கி வசதி ஏற்படுத்துதல்.

Provision of Lift Facilities to the Combined Court Buildings at Mettur in Salem District, Rasipuram and Tiruchengode in Namakkal District, Pattukottai and Thiruvaiyaru in Thanjavur at a cost of Rs.1,66,90,112/-.

சேலம் மாவட்டம் மேட்டூர், நாமக்கல் மாவட்டம் ராசிபுரம் மற்றும் திருச்செங்கோடு, தஞ்சாவூர் மாவட்டம் பட்டுக்கோட்டை மற்றும் திருவையாறு ஆகிய இடங்களிலுள்ள ஒருங்கிணைந்த நீதிமன்ற கட்டடங்களில் ரூ. 1,66,90,112/- செலவினத்தில் மின்தூக்கி வசதி ஏற்படுத்தப்படும்.



7. திருப்பூர் மாவட்டம் தாராபுரத்திலுள்ள கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்ற கட்டடத்திற்கு, மாற்று திறனாளி மற்றும் பிற வழக்காடிகளும் பயன்படுத்தக்கூடிய வகையிலான மின்தூக்கி வசதி ஏற்படுத்துதல்.

Provision of 8 passenger capacity Lift Facilities to the Additional District and Sessions Court Building at Dharapuram in Tiruppur District at a total cost of Rs.44,06,000/- for the use of Differently abled persons and other litigants.

திருப்பூர் மாவட்டம் தாராபுரத்திலுள்ள கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்ற கட்டடத்திற்கு மாற்று திறனாளி மற்றும் பிற வழக்காடிகளும் பயன்படுத்தக்கூடிய வகையிலான 8 நபர்கள் பயன்படுத்தக்கூடிய மின்தூக்கி வசதி, ரூ. 44,06,000/- செலவினத்தில் ஏற்படுத்தப்படும்.

8. நீதிபதிகளின் பயன்பாட்டிற்கென 818 மடிக்கணினிகள் மற்றும் அச்சுப்பொறிகள் வாங்குதல்.

Purchase of 818 Laptops and Printers for the use of Judicial Officers at a cost of Rs.10,71,55,047/-.

நீதிபதிகளின் பயன்பாட்டிற்கென 818 மடிக்கணினிகள் மற்றும் அச்சுப்பொறிகள் ரூ.10,71,55,047/- செலவினத்தில் வாங்கப்படும்.



9. சென்னை உயர்நீதிமன்றத்தின் முதன்மை ஆயத்தில் உள்ள வழக்குரைஞர்கள், வழக்குரைஞர்களின் எழுத்தர்கள் மற்றும் வழக்கு தொடுத்த பொதுமக்களின் பயன்பாட்டில் தற்போதுள்ள பழைய மின்னணு காட்சிப் பலகைகளுக்குப் பதிலாக, புதிய மின்னணு காட்சிப் பலகைகள் வாங்குதல்.

Purchase of Digital Display Boards to the Principal Seat of the Madras High Court to replace the existing old Digital Display Boards for the use of Advocates, Advocate Clerks and Litigant Public at a cost of Rs.2,07,37,321/-.

சென்னை உயர் நீதிமன்றத்தின் முதன்மை ஆயத்தில் உள்ள வழக்குரைஞர்கள், வழக்குரைஞர்களின் எழுத்தர்கள் மற்றும் வழக்கு தொடுத்த பொதுமக்களின் பயன்பாட்டில் தற்போதுள்ள பழைய மின்னணு காட்சிப் பலகைகளுக்குப் பதிலாக, புதிய மின்னணு காட்சிப் பலகைகள் ரூ.2,07,37,321/- செலவினத்தில் வாங்கப்படும்.

10. சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையின் பயன்பாட்டிற்கு, தற்போதுள்ள கியோஸ்க் கருவிகளுக்கு பதிலாக, 11 புதிய தொடு திரை கியோஸ்க் கருவிகள் வாங்குதல்.

Purchase of 11 Touch Screen Kiosks for replacing the existing Kiosks for the use of the Madurai Bench of Madras High Court at a cost of Rs. 23,07,658/-

சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையின் பயன்பாட்டிற்கு, தற்போதுள்ள கியோஸ்க் கருவிகளுக்கு பதிலாக, 11 புதிய தொடு திரை கியோஸ்க் கருவிகள் ரூ.23,07,658/- செலவினத்தில் வாங்கப்படும்.



11. புதியதாக உருவாக்கப்பட்டுள்ள கிருஷ்ணகிரி மற்றும் திருப்பூர் மாவட்டங்களில், தலா ஓர் உதவி இயக்குநர் மற்றும் உரிய தேவையான பணியிடங்கள், இதர வசதிகளுடன் கூடிய குற்றவழக்கு தொடர்வுத் துறை உதவி இயக்குநர் அலுவலகங்களை தோற்றுவித்தல்.

Formation of new offices of Assistant Director of Prosecution in the newly formed districts of Krishnagiri and Tiruppur along with one post of Assistant Director of Prosecution, necessary supporting staff and other required amenities.

புதியதாக உருவாக்கப்பட்டுள்ள கிருஷ்ணகிரி மற்றும் திருப்பூர் மாவட்டங்களில், தலா ஓர் உதவி இயக்குநர் மற்றும் உரிய தேவையான பணியிடங்கள், இதர வசதிகளுடன் கூடிய குற்றவழக்கு தொடர்வுத் துறை உதவி இயக்குநர் அலுவலகங்கள் தோற்றுவிக்கப்படும்.

12. குற்ற வழக்கு விசாரணைகளை திறம்பட நடத்தி, பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் வழக்கு தொடுப்பவர்களுக்கு நீதி கிடைக்க வழிவகை செய்யும் பொருட்டு, இணையவழி அணுகல், தரவு மற்றும் குரல் வசதி ஆகியவற்றை குற்ற வழக்குத் தொடர்வு துறைக்கு வழங்குதல்.

Provision of Online Access, Data and Voice Facility to the Prosecution Department for effective prosecution and justice rendering system to the victims / defacto complainants at a cost of Rs.20,58,000/-.

குற்ற வழக்கு விசாரணைகளை திறம்பட நடத்தி, பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் வழக்கு தொடுப்பவர்களுக்கு நீதி கிடைக்க வழிவகை செய்யும் பொருட்டு, இணையவழி அணுகல், தரவு மற்றும் குரல் வசதி ஆகியவற்றை குற்ற வழக்குத் தொடர்வு துறைக்கு ரூ.20,58,000/- செலவினமாக வழங்கப்படும்.



13. மாநிலத்திலுள்ள 1008 சார்நிலை நீதிமன்றங்களுக்கு கணினி மற்றும் உபகரணங்கள் ரூ.80 கோடி செலவினத்தில் வாங்க நிர்வாக ஒப்புதல், 2023-2024 மற்றும் 2024-2025 ஆகிய நிதியாண்டுகளில் இரண்டு கட்டங்களாக நிதி ஒப்புதல் வழங்குதல்.

Purchase of Computers and IT Peripherals to 1008 Subordinate Courts in the State by according Administrative Sanction for Rs.80 crore and Financial Sanction in two phases for the financial years, 2023-2024 and 2024-2025.

மாநிலத்திலுள்ள 1008 சார்நிலை நீதிமன்றங்களுக்கு கணினி மற்றும் உபகரணங்கள் ரூ.80 கோடி செலவினத்தில் வாங்க நிர்வாக ஒப்புதல், 2023-2024 மற்றும் 2024-2025 ஆகிய நிதியாண்டுகளில் இரண்டு கட்டங்களாக நிதி ஒப்புதல் வழங்கப்படும்.

14. குற்றவழக்குத் தொடர்வு இயக்ககத்தின் பயன்பாட்டிற்கு, தற்போது பயன்பாட்டிலுள்ள 10 மேசை கணினிகளுக்கு பதிலாக, புதியதாக 10 மேசை கணினிகளும் மற்றும் 5 அச்சுப் பொறிகள் (Printers) வாங்குதல்.

Purchase of 10 new Desktop computers replacing the old Desktop computers used in the office of the Directorate of Prosecution and purchase of 5 new Printers at a cost of Rs.12,95,000/-

குற்றவழக்குத் தொடர்வு இயக்ககத்தின் பயன்பாட்டிற்கு, தற்போது பயன்பாட்டிலுள்ள 10 மேசை கணினிகளுக்கு பதிலாக, புதியதாக 10 மேசை கணினிகளும் மற்றும் 5 அச்சுப் பொறிகள் (Printers) ரூ.12,95,000/- செலவினத்தில் வாங்கப்படும்.



15. குற்றவழக்குத் தொடர்வு இயக்ககத்தின் கீழுள்ள சார்நிலை அலுவலகங்களின் பயன்பாட்டிற்கு, தற்போது பயன்பாட்டிலுள்ள மேசை கணினி மற்றும் அச்சுப் பொறிகளுக்கு பதிலாக, புதியதாக 28 மேசை கணினிகளும் மற்றும் 28 அச்சுப் பொறிகளும் (Printers) வாங்குதல்.

Purchase of 28 new Desktop computers and 28 Printers replacing the old Desktop computers and printers used in the Subordinate offices of the Directorate of Prosecution at a cost of Rs.46,76,000/-

குற்றவழக்குத் தொடர்வு இயக்ககத்தின் சார்நிலை அலுவலகங்களின் பயன்பாட்டிற்கு, தற்போது பயன்பாட்டிலுள்ள மேசை கணினி மற்றும் அச்சுப் பொறிகளுக்கு பதிலாக, புதியதாக 28 மேசை கணினிகளும் மற்றும் 28 அச்சுப் பொறிகளும் (Printers) ரூ.46,76,000/- செலவினத்தில் வாங்கப்படும்.

# சிறைகள் மற்றும் சீர்திருத்தப் பணிகள்

1. அனைத்து மத்திய சிறைகள், பெண்கள் தனிச்சிறைகள் மற்றும் மாவட்ட சிறை மற்றும் பார்ஸ்டல் பள்ளி, புதுக்கோட்டை ஆகியவற்றில் நூலக வசதிகளை மேம்படுத்துதல்.

Upgradation of Library facilities in all Central Prisons, Special Prisons for Women and District Jail and Borstal School, Pudukkottai.

சிறைவாசிகளின் கல்வி மேம்பாட்டிற்காகவும், வாசிப்பு திறனை ஊக்குவிக்கவும், அவர்கள் மேலும் குற்றச்செயல்களில் ஈடுபடாமல் இருக்கவும் அனைத்து மத்திய சிறைகள், பெண்கள் தனிச்சிறைகள் மற்றும் மாவட்ட சிறை மற்றும் பார்ஸ்டல் பள்ளி, புதுக்கோட்டை ஆகியவற்றில் உள்ள சிறை நூலகங்கள் ரூ.208.74 இலட்சம் தொடரா செலவினத்தில் மேம்படுத்தப்படும்.

2. சிறைகள் மற்றும் சீர்திருத்தப் பணிகள் துறையில் பணிபுரியும் முதல் மற்றும் இரண்டாம் நிலை சிறைக் காவலர்களுக்கு மிகை நேர பணிக்கான ஊதியத்தை காவல் துறை ஆளிநர்களுக்கு (முதல் மற்றும் இரண்டாம் நிலை) இணையாக உயர்த்தி வழங்குதல்.

Enhancement of Extra Time Remuneration (ETR) to Grade I /Grade II Warders on par with Police Constables (Grade I and Grade II).

சிறைகள் மற்றும் சீர்திருத்தப் பணிகள் துறையில் பணிபுரியும் முதல் மற்றும் இரண்டாம் நிலை சிறைக் காவலர்களுக்கு மிகை நேர பணிக்கான ஊதியம் காவல்துறை ஆளிநர்களுக்கு இணையாக ரூ.200 லிருந்து ரூ.500 ஆக ஆண்டுக்கு ரூ.324.32 இலட்சம் தொடர் செலவினத்தில் உயர்த்தி வழங்கப்படும்.



3. சிறைகள் மற்றும் சீர்திருத்தப் பணிகள் துறை பணியாளர்களுக்கு (இரண்டாம் நிலைக் காவலர்கள் முதல் கண்காணிப்பாளர்கள் வரை) இடர் படியை (Risk Allowance) காவல்துறை பணியாளர்களுக்கு இணையாக உயர்த்தி வழங்குதல்.

Enhancement of Risk Allowance to the Prisons and Correctional Services staff (Grade-II warders to Superintendents) on par with Police personnel.

சிறைகள் மற்றும் சீர்திருத்தப் பணிகள் துறை பணியாளர்களுக்கு (இரண்டாம் நிலைக் காவலர்கள் முதல் கண்காணிப்பாளர்கள் வரை) இடர் படியை (Risk Allowance) காவல்துறை பணியாளர்களுக்கு இணையாக, ரூ.800-லிருந்து ரூ.1000-ஆக ஆண்டுக்கு ரூ.106.00 இலட்சம் தொடர் செலவினத்தில் உயர்த்தி வழங்கப்படும்.

4. அனைத்து மத்திய சிறைகள் மற்றும் தனிக் கிளைச்சிறை, பூந்தமல்லி ஆகிய சிறைகளுக்கு 13 நேரியல் அல்லாத சந்திப்பு கண்டுபிடிப்பான் (Non Linear Junction Detector) கருவிகள் வழங்குதல்.

Provision of 13 Non-Linear Junction Detector (NLJD) to all Central Prisons and Special Sub Jail, Poonamallee.

சிறைக்குள் தடைசெய்யப்பட்ட மின்னணு கருவிகள் பயன்படுத்துவதை தடுப்பதற்கு 13 நேரியல் அல்லாத சந்திப்பு கண்டுபிடிப்பான் (Non Linear Junction Detector) என்ற கருவி அனைத்து மத்திய சிறைகள் மற்றும் தனிக் கிளைச்சிறை, பூந்தமல்லி ஆகிய சிறைகளுக்கு ரூ.325.00 இலட்சம் தொடரா செலவினத்தில் கொள்முதல் செய்யப்படும்.



5. 105 கிளைச் சிறைகள், 8 மாவட்ட சிறைகள் மற்றும் பெண்கள் (இணைப்பு) சிறை, திருப்பூர் ஆகியவற்றில் துணைக்கருவிகளுடன் கூடிய 600 மறைகாணிகள் அமைத்தல் மற்றும் 9 மத்திய சிறைகளில் காணொளி சுவர் வசதி ஏற்படுத்துதல்.

Provision of 600 number of CCTV with accessories for 105 Sub Jails, 8 District Jails and Women Jail (Annex), Tiruppur and Video Wall facility in 9 Central Prisons.

105 கிளைச் சிறைகள் மற்றும் ஆத்தூர், திண்டுக்கல், விருதுநகர், நாகர்கோவில், நாகப்பட்டினம், ராமநாதபுரம், கோபிச்செட்டிப்பாளையம், செங்கல்பட்டு ஆகிய 8 மாவட்ட சிறைகள் மற்றும் பெண்கள் (இணைப்பு) சிறை, திருப்பூர் ஆகியவற்றில் துணைக்கருவிகளுடன் கூடிய 600 மறைகாணிகள் அமைக்கவும் மற்றும் 9 மத்திய சிறைகளில் காணொளிச் சுவர் வசதியும் ரூ.1150.00 இலட்சம் தொடரா செலவினத்தில் ஏற்படுத்தப்படும்.

6. சிறைகள் மற்றும் சீர்திருத்தப் பணிகள் துறை தலைமை அலுவலகத்தின் கணினி சார் தரவுகளை (Data) பாதுகாத்து வைத்திடும் பொருட்டு குறும் பரப்பு இணையம் (Local Area Network) மற்றும் தடுப்புச் சுவர் (Fire Wall) ஆகியவற்றை தலைமை அலுவலகத்தில் அமைத்தல்.

Setting up of Local Area Network (LAN) and Fire Wall to the Office of the Prisons & Correctional Services Headquarters to safeguard the data stored in the Prison Headquarters.

சிறைகள் மற்றும் சீர்திருத்தப் பணிகள் துறை தலைமை அலுவலகத்தின் கணினி சார் தரவுகளை (Data) பாதுகாக்கும் பொருட்டு, குறும் பரப்பு இணையம் (Local Area Network) மற்றும் தடுப்புச் சுவர் (Fire Wall) ஆகியவை ரூ.59.90 இலட்சம் தொடரா செலவினத்தில் அமைக்கப்படும்.



7. அனைத்து மத்திய சிறைகளுக்கும் மின்னணு தொழிற்நுட்பத்துடன் கூடிய 450 நடைபேசிகள் (Digital Mobile Radio Walkie-Talkie) மற்றும் துணைக்கருவிகளுடன் கூடிய 15 ரிப்பீட்டர் செட்டுகள் வழங்குதல்.

Provision of 450 Numbers of Digital Mobile Radio Walkie-Talkie and 15 numbers of repeater sets along with accessories for all Central Prisons.

சிறைகளில் பாதுகாப்பு ஏற்பாடுகளை பலப்படுத்த, மின்னணு தொழிற்நுட்பத்துடன் கூடிய 450 நடைபேசிகள் (Digital Mobile Radio Walkie-Talkie) மற்றும் துணைக் கருவிகளுடன் கூடிய 15 ரிப்பீட்டர் செட்டுகள் ரூ.300.00 இலட்சம் தொடரா செலவினத்தில் அனைத்து மத்திய சிறைகளுக்கும் வழங்கப்படும்.

8. 13 மாவட்ட சிறைகளுக்கு ஊடுகதிர் அலகிடல் கருவிகள், (X-Ray Baggage Scanner) வழங்குதல்.

**Provision of X-Ray Baggage Scanner to 13 District Jails.**

தடைசெய்யப்பட்ட பொருட்கள் சிறைக்குள் வருவதை துல்லியமாக கண்டறியும் பொருட்டு, ஏற்கனவே அனைத்து மத்திய சிறைகள், பெண்கள் தனிச்சிறைகளுக்கு வழங்கப்பட்டுள்ளதைப் போன்று 13 மாவட்ட சிறைகளுக்கு ஊடுகதிர் அலகிடல் கருவிகள் (X-Ray Baggage Scanner) ரூ.273.00 இலட்சம் தொடரா செலவினத்தில் வழங்கப்படும்



9. அனைத்து மத்திய சிறைகள் மற்றும் பெண்கள் தனிச்சிறைகளில் உள்ள உணவு வழங்கும் பழைய தள்ளுவண்டிகள், உலர் மற்றும் ஈரப்பத மாவு அரைக்கும் இயந்திரங்களுக்கு பதிலாக உணவு வழங்கும் புதிய மின்சார வண்டி (e-auto), உலர் மற்றும் ஈரப்பத மாவு அரைக்கும் இயந்திரங்கள் (தலா 2 எண்கள்) வழங்குதல்.

Replacement of old Trolleys, Flour Mills and Wet Grinders with new food serving vehicle (i.e) e-auto, Wet Grinders and Flour Mills (each 2 Nos) in all Central Prisons and Special Prisons for Women.

அனைத்து மத்திய சிறைகள் மற்றும் பெண்கள் தனிச்சிறைகளில் உள்ள உணவு வழங்கும் பழைய தள்ளுவண்டிகள், உலர் மற்றும் ஈரப்பத மாவு அரைக்கும் இயந்திரங்களுக்கு பதிலாக உணவு வழங்கும் புதிய மின்சார வண்டி (e-auto), உலர் மற்றும் ஈரப்பத மாவு அரைக்கும் இயந்திரங்கள் (தலா 2 எண்கள்) ரூ.123.60 இலட்சம் தொடரா செலவினத்தில் கொள்முதல் செய்யப்படும்.

10. சிறைவாசிகளுக்கு தற்போது வழங்கப்படும் உணவு முறை கூடுதல் செலவுடன் மாற்றி அமைத்தல்.

Modification of Diet Pattern for Prisoners with additional expenditure.

சிறைவாசிகளின் நலனுக்காக நிபுணர் குழுவின் அறிக்கையின் அடிப்படையில் உணவு முறை மற்றும் உணவின் அளவினை மாற்றி வழங்கிடும் பொருட்டு ஆண்டுக்கு ரூ.2600.00 இலட்சம் கூடுதல் தொடர் செலவினத்தில் இத்திட்டம் செயல்படுத்தப்படும்.



11. சிறைத்துறை துணைத்தலைவர் (தலைமையிடம்) பதவியை சிறைத்துறை தலைவர் (தலைமையிடம்) என்று தரம் உயர்த்துதல்.

Upgrading the post of Deputy Inspector General of Prisons (Headquarters) as Inspector General of Prisons (Headquarters).

சிறைகள் மற்றும் சீர்திருத்தப்பணிகள் துறை நிருவாகத்தை மேம்படுத்தும் பொருட்டு சிறைத்துறை துணைத்தலைவர் (தலைமையிடம்) பதவியை சிறைத்துறை தலைவர் (தலைமையிடம்) என்று தரம் உயர்த்தப்படும்.

12. சிறைவாசிகளுக்கு வழங்கப்பட்டு வரும் தொலைபேசி வசதியின் ( ஆடியோ) கால அளவை 3 நாட்களுக்கு ஒரு முறை, மாதத்திற்கு 10 முறை, ஒரு அழைப்பிற்கு 12 நிமிடங்கள் என உயர்த்தி வழங்குவதோடு காணொளி ( வீடியோ) தொலைபேசி வசதியினை புதியதாக ஏற்படுத்துதல்.

Increasing the frequency of calls and duration (Audio) for the prisoners in the telephone booth facility as once in 3 days 10 times in a month and 12 minutes per call and introducing Video Call facility.

சிறைவாசிகளின் மன அழுத்தத்தை குறைக்கவும், அவர்கள் தவறுகளை உணர்ந்து மேலும் குற்றங்களில் ஈடுபடுவதை தடுத்திடும் பொருட்டும், சிறைவாசிகள் தமது குடும்ப உறுப்பினர்கள், நண்பர்கள், வழக்குரைஞர்கள் ஆகியோரிடம் தொலைபேசி மூலம் தொடர்பு கொள்ள தற்போது வழங்கப்பட்டு வரும் தொலைபேசி வசதிக்கான ( ஆடியோ) கால அளவை 3 நாட்களுக்கு ஒரு முறை, மாதத்திற்கு 10 முறை, ஒரு அழைப்பிற்கு 12 நிமிடங்கள் என உயர்த்தி வழங்குவதோடு, காணொளி ( வீடியோ) தொலைபேசி வசதியும் ஏற்படுத்தப்படும்.



13. சிறைவாசிகளால் தயாரிக்கப்படும் சிறைச் சந்தை பொருட்களை "Freedom" என்ற குறியீட்டு பெயரில் தமிழ்நாடு காவலர் அங்காடிகளில் விற்பனை செய்தல்.

**Selling of Prison Bazaar articles made by the prisoners under the brand name of "Freedom" in Tamil Nadu Police Canteen.**

சிறைவாசிகளால் தயாரிக்கப்பட்டு "Freedom" என்ற குறியீட்டு பெயரில் சிறைச் சந்தைகளில் தற்போது விற்கப்பட்டு வரும் பொருட்கள் இனி தமிழ்நாடு காவலர் அங்காடிகளிலும் விற்பனை செய்ய உரிய ஏற்பாடுகள் செய்யப்படும்.

# சட்டத் துறை

1. **கோயமுத்தூர், திருச்சிராப்பள்ளி மற்றும் திருநெல்வேலி அரசு சட்டக் கல்லூரிகளுக்கு அறைகலன்கள் வசதி செய்து தரப்படும்.**

**Furniture facilities will be provided to the Government Law Colleges at Coimbatore, Tiruchirappalli and Tirunelveli.**

கோயமுத்தூர், திருச்சிராப்பள்ளி மற்றும் திருநெல்வேலி அரசு சட்டக் கல்லூரிகளுக்குத் தேவையான அறைகலன்கள் மற்றும் மர இரும்பு தளவாடங்கள் வசதி ரூ.1.58 கோடி செலவில் செய்து தரப்படும்.

2. கோயமுத்தூர் அரசு சட்டக் கல்லூரி வளாகத்தினைச் சுற்றிலும் சுற்றுச் சுவர் அமைக்கப்படும்.

Compound wall will be constructed around the campus of Government Law College, Coimbatore.

கோயமுத்தூர் அரசு சட்டக் கல்லூரி வளாகத்தினைச் சுற்றிலும் ரூ.6 கோடி செலவில் சுற்றுச் சுவர் அமைக்கப்படும்.



3. தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழக நூலகத்திற்கு சட்டப் புத்தகங்கள் வாங்கிட நிதி ஒப்பளிப்பு வழங்கப்படும்.

Financial sanction will be accorded towards purchase of Law Books for the Tamil Nadu Dr. Ambedkar Law University's Library.

தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழக நூலகத்திற்கு கூடுதலாக சட்டப் புத்தகங்கள் வாங்கிட ரூ. 65 இலட்சம் நிதி ஒப்பளிப்பு வழங்கப்படும்.

4. அரசு சட்டக் கல்லூரிகள் மற்றும் சீர்மிகு சட்டப்பள்ளியில் இளநிலை சட்டப்படிப்பு பயிலும் மாணவர்களுக்கு 'வழக்காடுதல் கலை' என்ற தலைப்பில் பயிலரங்கம் நடத்தப்படும்.

Workshop in the topic of 'Art of Advocacy' will be conducted to the students pursuing Under Graduate Law degree courses in Government Law Colleges and School of Excellence in Law.

அரசு சட்டக் கல்லூரிகள் மற்றும் சீர்மிகு சட்டப்பள்ளியில் இளநிலை சட்டப்படிப்பு பயிலும் மாணவர்களுக்கு 'வழக்காடுதல் கலை' என்ற தலைப்பில் பயிலரங்கம் நடத்திட ஏதுவாக தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழகத்திற்கு தொடரும் செலவினமாக ரூ.32.25 இலட்சம் நிதி ஒப்பளிப்பு வழங்கப்படும். தோராயமாக ஒரு அரசு சட்டக் கல்லூரிக்கு 30 மாணவர்கள் வீதம் 15 கல்லூரிகளைச் சேர்ந்த 450 மாணவர்கள் பங்கு பெறுவர். வெளிமாவட்டங்களைச்



சார்ந்த அரசு சட்டக் கல்லூரி மாணவர்கள் மேற்சொன்ன பயிலரங்கத்தில் பங்கு பெறுவதை உறுதி செய்திட அவர்களுக்கு போக்குவரத்து கட்டணம், உணவு மற்றும் தங்கும் விடுதி ஆகியவற்றுக்காக நிதி உதவி வழங்கப்படும்.

**எஸ். ரகுபதி**

சட்டத் துறை அமைச்சர்